**02.09.2025**

**CC No.77/2020**

**அ.சா.2 – ராதிகா, த/பெ.மூக்கையா**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்**

**இந்நீதிமன்ற சி.எம்.பி.எண்.410/2025ல் கடந்த 12.08.2025ல் ஏற்பட்ட உத்தரவின் பேரில் அ.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

ஆஜர் எதிரி எனது உறவினர். அவருக்கும், எனக்கும் நல்ல பழக்கம் உண்டு. எதிரி எனது வீட்டிற்கு வந்து எனக்கு தேவையான உதவிகளை செய்வார் என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரிக்கும் காயம் இருந்தது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எதிரிக்கு தலையில் தையல் போடப்பட்டு, 6,7 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தியை போலீசாரிடம் நான் கொடுக்கவில்லை. எதிரி என்னுடன் பழகியதை எனது கணவர் சந்தேகப்பட்டு, எதிரியை தாக்கி காயபடுத்திவிட்டு அதிலிருந்து தப்பித்து ஓடும்போது எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி படி ரூ.500/–ஐ பெற்றுக்கொண்டேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்